தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 24
இதழ் 11
மார்ச் 2023

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



## சர்வதேச மகளிர் தினம்

மார்ச் 08



# மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சந்திப்பு

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை 28.02.2023 அன்று புதுதில்லியில் உள்ள, லோக் கல்யாண் மார்க் இல்லத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து திருவள்ளுவர் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார்.

# மாண்புமிகு ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் அவர்களை 28.02.2023 அன்று புதுதில்லியில் உள்ள கிருஷி பவன் (Krishi Bhavan) இல்லத்தில் சந்தித்து, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் மேம்பாடு, திறன் மேம்பாடு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள், பயிற்சிகள் குறித்தும். கூடுதல் நிதி ஒதுக்கீடு மற்றும் மானியங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## அன்புள்ள சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா’ என்றார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. எவ்வளவு உண்மையான வார்த்தைகள். மாதவம் செய்திடாமல் கிடைக்குமோ இப்படி ஒரு உன்னதமான பிறப்பு! எத்தனை எத்தனை பாகுபாடுகள், எத்தனை எத்தனை வேறுபாடுகள், பாலியல் வன்முறை, உரிமை பறிப்பு, சுதந்திர மறுப்பு, வறுமை, குடும்பச் சுமை, இப்படி பல இன்னல்கள் வாழ்க்கையில் தினம் தினம் வந்து சேர்ந்தாலும், இன்முகத்துடன் இவற்றை சமாளித்து சாதனை செய்து வருகிறவர்கள் பெண்கள்.

ஆண்களுக்கு நிகரான உரிமை, வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணி நேர வேலை, வாக்குரிமை, அடிமைகளாக நடத்துவதிலிருந்து விடுதலை போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கள் நடத்திய போராட்டங்களுக்கு வெற்றி கிடைத்த மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினம் கடைப்பிடிக்க அடிப்படை வித்தாக அமைந்தது. 1975–ம் ஆண்டில்தான் ஐ.நா. மார்ச் 8–ஐ சர்வதேசப் பெண்கள் தினமாக முறைப்படி அறிவித்து கொண்டாடத் தொடங்கியது. அத்துடன் ஒவ்வோர் ஆண்டின் பெண்கள் தினத்துக்கும் ஒரு முழக்கத்தையும் முன்வைத்து வருகிறது ஐ.நா. இதன்படி ஐ.நா. அறிவிப்புக்குப் பின் வந்த முதல் பெண்கள் தினத்தின் முழக்கம் ‘சமத்துவத்தை யோசி, அறிவுபூர்வமாக கட்டியெழுப்பு, மாற்றத்துக்காக புதுமையாக சிந்தி‘ என்பதாகும். ‘‘பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்’’என்ற கருப்பொருளில் 2023ஆம் ஆண்டு மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது என்பது நமக்கு பெருமையளிக்கக் கூடியதாக உள்ளது.

இன்றைய தினம் பல்வேறு சாதனைகளை படைத்து வரும் மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் கூட தடைகள் பலவற்றை தகர்த்து வெற்றி பெற்றவர்கள்தான். கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் ஏழை எளிய பெண்ணைக் கூட குழுவாக இணைத்து, பயிற்சிகள் பல வழங்கி அவர்களை தொழில் முனைவோராக்கிய பெருமை நமது மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்திற்கு உண்டு என்பதை இந்த மகளிர் தினத்தில் கூறிக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதுடன், அவற்றினை சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடித்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து வருவது அனைவரும் அறிந்ததுதான். தமிழ்நாடு அரசின் முத்திரைப் பதிக்கும் திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம் ஆகியவற்றில் சுய உதவிக் குழு மகளிரை ஈடுபடுத்தியதன் மூலம் அவர்களின் தன்னலமற்ற சேவையை அனைவரும் அறியச் செய்து, மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருமை சேர்த்துள்ளார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். வங்கிக் கடன் இணைப்புகள், சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துதல், இளைஞர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்குதல் போன்ற பயனுள்ள பல திட்டங்கள் ஊக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, சுய உதவிக் குழுக்கள் மேலும் ஆர்வத்துடன் செயல்பட்டு, அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,



மகளிர் தினம்

**அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,**

உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம்.

வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த பெண்கள் இன்று ஆணுக்கு நிகராக ஆட்டோ முதல் வானூர்தி ஓட்டுவதாகட்டும், பல்வேறு பன்நோக்கு நிறுவனங்களில் உயர் பதவியை வகிப்பதாகட்டும், அரசியல், கல்வி, தொழில், சமுதாயப் பணி என அனைத்திலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

ஆணுக்கு நிகராக இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்கு உரிமை, வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை எனப்பல கோரிக்கைகளை வலியுறுத்தி பெண்கள் போராடினார்கள். அதற்காக எண்ணற்ற அடக்குமுறைகளுக்கு ஆளானார்கள். அடக்குமுறைகளையும், ஆணதிகாரத்தையும் தகர்த்து பெண்கள் பெற்ற வெற்றியைக் குறிக்கும் தினமான மார்ச் 8ம் தேதியை உலகில் உள்ள அனைத்து பெண்களும் கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர்.

“வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்” என்று பெண்கள் விடுதலை கும்மி படைத்த பாரதியின் கவிதை வரிகளில் வருவதைப் போல, “பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்” என்று சாதனைகளைப் படைத்து வரும் பெண்களுக்கு முன்னுதாரணமாக மகளிர் சுய உதவிக் குழு பெண்களைக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழி நடக்கும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் பெண்களின் வளர்ச்சிக்காகவும், அவர்தம் நலத்திற்காக திட்டங்களைத் தீட்டி அவற்றை செயல்படுத்தும் அரிய வாய்ப்பை நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு தந்துள்ளார். இந்த உன்னத பணியினை சிறிதும் தளர்வில்லாமல் செய்து வருகிறது நமது நிறுவனம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் என்பது நிதர்சனமான நிகழ்வாகும்.

மாநிலத்தின் எந்த ஒரு மாவட்டத்தில் நலத் திட்ட உதவிகள் வழங்கினாலும், அங்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துதல், ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் போன்றவற்றிற்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குதல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் திறன் திருவிழாக்கள் நடத்துதல் ஆகியவற்றில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக முனைப்பு காட்டி வருகிறார் என்பது நமது இயக்கத்திற்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாகும்.

எனவே, மகளிர் சுய உதவிக் குழுவினர் அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி உங்களின் வாழ்வை வளமுள்ளதாக்கிக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மகளிர் தின வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்**

பகைவர், அயலோர், நண்பர் எனப் பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

# உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு பாரதப் பிரதமர்! குறும்பர் மற்றும் தோடா ஓவியத்தை கண்டு வியந்தார் !!! | 07 |
| புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடங்கி வைத்தல் | 09 |
| அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் | 11 |
| முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து ஆய்வு | 14 |
| மங்கையராய் பிறப்பதற்கே... | 16 |
| உளுந்து சாதம் | 23 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
# முற்றம்
விலை ரூ. 20/- • மலர் 24 • இதழ் 11 • மார்ச் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **எம். அருணா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல்இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல்இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,**கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்',**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# வெள்ளி விழா காணும் முற்றம்

**அன்புள்ள வாசகர்களுக்கு,**

மார்ச் மாதம் என்றாலே நினைவிற்கு வருவது அகில உலக மகளிர் தினம். 100 ஆண்டுகளுக்கு முன்பு தொழிற்சாலைகளில் பணியாற்றி வந்த பெண்கள், தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய வசதிகளைக் கேட்டு உரிமை குரல் எழுப்பினர். அன்று தொடங்கி உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் தேதி மகளிர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் பல இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் கோடிக்கணக்கான பெண்கள் உறுப்பினர்களாக இணைந்து, தங்களின் உரிமையை நிலைநாட்டவும், நிலையான வளர்ச்சியை நோக்கியும் செயல்பட்டு வருகின்றனர். இந்த சூழலில் அகில உலக மகளிர் தினமானது அவர்களுக்கு மேலும் உத்வேகத்தை கொடுக்கின்றது.

ஒரு பெண் தனக்காகவும், தனது குடும்பத்திலும், அவர்கள் வாழும் சமுதாயத்திலும் முடிவுகள் எடுப்பதில் பங்கு கொள்ளும் அளவிற்கு தயாராகும் போதுதான் அவள் ஆற்றல் மிக்க பெண்ணாக உருவாகிறாள். கல்வியறிவோடு கூடிய விழிப்புணர்வும், பொருளாதாரத்தை ஈட்டும் திறனையும் வளர்த்து கொண்டால்தான் ஆற்றல் மிக்க பெண்ணாக மாற முடியும். இவற்றை தனியாக ஒரு பெண் சாதித்து விட முடியாது. குழுவாகவோ, சங்கங்களாகவோ, இயக்கமாகவோ இணைந்து செயல் படும்போது மட்டுமே எளிதாக சாதிக்க முடியும். பெண்கள் நெருப்பிற்கு இணையாக ஒப்பிடப்படுகிறார்கள். காரணம், நெருப்பு அனைத்தையும் தனதாக்கி கொள்ளும் ஆற்றல் பெற்றது. இப்படிப்பட்ட குணத்தை கொண்ட பெண்கள், தங்களை சுற்றியுள்ள பெண் குலத்தை ஆற்றல் பெற செய்வதோடு, தேவையற்றவைகள் தங்களை அணுக முடியாமல் பாதுகாத்து கொள்ளவும் முடிகிறது.

இந்த நிலையை பெண்களுக்கு தொடர்ந்து எடுத்து கூறவும், உற்சாகப்படுத்தவும், வழிகாட்டுவதற்கும், அவர்களின் உரிமை போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ். பெண்களின் உரிமை, பெண்களின் வளர்ச்சி, பெண்களின் கல்வி, பெண்களின் திறன் வளர்ப்பு ஆகியவற்றை மட்டுமே மையப் பொருளாகக் கொண்டு, எவ்வித வியாபார நோக்கமும் இன்றி கொள்கை பிறழாமல், கடந்த 24 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு, இந்த ஆண்டு வெள்ளி விழாவும் காண்கிறது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்.

அகில உலக பெண்கள் தினத்தை கொண்டாடும் அனைத்து பெண்களுக்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

# மாண்புமிகு பாரதப் பிரதமர்!

## குறும்பர் மற்றும் தோடா ஓவியத்தை கண்டு வியந்தார் !!!

டில்லியில் மேஜர் தியான்சந்த் தேசிய மைதானத்தில் 'ஆதி மகோத்சவ்' என்ற பெயரில் தேசிய பழங்குடியினர் திருவிழாவை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கலைநயம்மிக்க பொருட்களை ஆர்வமுடன் பார்வையிட்டார். TRIFED ஏற்பாடு செய்திருந்த இந்த கண்காட்சியில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தொழிற்குழு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியத்தின் குறும்பர் மற்றும் தோடா ஓவியம் அரங்கத்தினைப் பார்வையிட்டு ரசித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், பாலசுப்பிரமணியத்திற்கு வாழ்த்து கூறினார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி (CSS), தொழிற்குழு (EG) உருவாக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்விழாவின் போது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், பழங்குடியின இளைஞர்களின் திறன் மேம்பாட்டுக்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.



பழங்குடியின இளைஞர்களின் திறன் மேம்பாட்டுக்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவித்தார்.

## பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.02.2023 அன்று "கள ஆய்வில் முதல்வர்" திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவது குறித்து ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்றுக் கொண்டதில், மனுக்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏற்பு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, அன்றைய தினமே சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதலுக்கான ஆணை, தையல் இயந்திரம், கணவரால் கைவிடப்பட்டவருக்கான உதவித் தொகை ஆகியவற்றை வழங்கினார். உடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.




# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்
## அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 02.02.2023 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ''கள ஆய்வில் முதலமைச்சர்'' திட்டத்தின் கீழ் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நான்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# மாணவர்களுக்கு வழங்கப்படும்
## உணவின் தரத்தினை ஆய்வு செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 02.02.2023 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள, வேலூர் புறநகர், அலமேலுமங்காபுரம் அரசு ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்து, மாணவர்களிடம் உரையாடினார். இந்நிகழ்வின் போது, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



# புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடங்கி வைத்தல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 08.02.2023 அன்று திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம், இந்து கல்லூரியில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/- உதவித் தொகை வழங்கும் “புதுமைப் பெண்” திட்டத்தில் மேலும் 1,04,347 மாணவிகள் பயன் பெறும் வகையில் புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை தொடங்கி வைத்து, 10 மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். இவ்விழாவில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை சந்திரசேகர், திரு. ஏ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் திரு. ஜி. உதயகுமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., சமூக நலத்துறை இயக்குநர் திருமதி. த.ரத்னா, இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.02.2023 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ‘‘கள ஆய்வில் முதலமைச்சர்’ திட்டத்தின் கீழ் சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச்சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். இந்த கலந்துரையாடலின் போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கார்மேகம், இ.ஆ.ப., நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஸ்ரேயா பி.சிங், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. சாந்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# முத்திரை பதிக்கும் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 09.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முத்திரை பதிக்கும் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# ஒடிசா மாநிலத்தில் மேற்கொண்ட பயணம் குறித்த ஆய்வறிக்கை வழங்குதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 09.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023 ஜனவரி 19 மற்றும் 20ஆம் தேதிகளில் ஒடிசா மாநிலத்தில் மேற்கொண்ட பயணம் குறித்த ஆய்வறிக்கையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.



# அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம், மாசிநாயக்கன்பட்டியில் 27.01.2023 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., சிறப்பு செயலாக்க திட்டத்தின் அரசு சிறப்பு செயலாளர் திரு. எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மருத்துவர். கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ.கார்மேகம், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பல்துறை பணி விளக்க கண்காட்சி அரங்குகளை பார்வையிடல்



நாமக்கல் மாவட்டம், பொம்மைகுட்டை மெட்டில் 28.01.2023 அன்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பல்துறை பணி விளக்க கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாநிலங்களவை, மக்களவை மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., சிறப்பு செயலாக்க திட்டத்தின் அரசு சிறப்பு செயலாளர் திரு. எஸ்.நாகராஜன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மருத்துவர். கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஸ்ரேயா பி.சிங், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.






# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 06.02.2023 அன்று மதுரை மாவட்டம், பாண்டி கோவில் சுற்றுச்சாலை அருகே உள்ள கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 72,092 பயனாளிகளுக்கு ரூ.173 கோடி மதிப்பீட்டில் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கி, சியாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தின் கீழ் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 30 திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகராட்சி மேயர், நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவர்கள் கலந்து கொண்டனர்.







# நரிக்குறவர் சுய உதவிக் குழுப் பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை மையம் திறப்பு

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 08.02.2023 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பூமாலை வணிக வளாகத்தில், நரிக்குறவர் சுய உதவிக் குழுப் பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை மையத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ம.ஆர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 07.02.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து ஆய்வு





மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.02.2023 அன்று சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் அருகில் உள்ள முல்லை நகர் மாநகராட்சி அரசு தொடக்கப்பள்ளியில் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ குறித்து ஆய்வு மேற்கொண்டு, பள்ளி குழந்தைகளுடன் அமர்ந்து உணவு அருந்தினார். அப்போது பள்ளிக் குழந்தைகளின் வருகைப் பதிவேடு குறித்தும், பள்ளி வளாகம் மற்றும் கழிப்பறைகள் தூய்மை குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் வழங்குதல்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் 11.02.2023 அன்று திருப்பூர் மாநகராட்சி, சிக்கண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மாபெரும் வேலைவாய்ப்பு திருவிழாவைத் துவக்கி வைத்து, தேர்வானவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளை வழங்கினர். இந்நிகழ்வின்போது, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர். எஸ்.வினீத், இ.ஆ.ப., திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு. ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர், இ.ஆ.ப., திருப்பூர் சார் ஆட்சியர் திரு.ஸ்ருதன் ஜெய் நாராயணன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திருமதி. மீனாட்சி மற்றும் திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் ஆய்வு

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டாரம், கந்தனேரி ஊராட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படும் கந்தனேரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் 01.02.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மக்கள் நிலை ஆய்வில் புதியதாக சேர்க்கப்பட்டவர்கள் விபரம் குறித்து சுய உதவிக் குழு உறுப்பினர்களிடமும், ஊராட்சியில் பணிபுரிந்து வரும் சமுதாய பணியாளர்களான CST, CRP CP ஆகியோரிடம் அவர்கள் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் கேட்டறிந்தார். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரிக்கும்படி கணக்காளரிடம் அறிவிறுத்திய மேலாண்மை இயக்குநர் அவர்கள், கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ள கருவி வங்கியின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட வள பயிற்றுநர் (பண்ணை) மற்றும் சமுதாய வள பயிற்றுநரிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின்திட்ட இயக்குநர் திரு. நீ.செந்தில்குமரன், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாரப் பணியாளர்கள் உடனிருந்தனர்.



## கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு 09.02.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்கலந்து கொண்டனர்.






## பணி நியமன ஆணைகள் வழங்குதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், மணவாள நகர், கே.இ.என்.சி. அரசு மேல்நிலைப்பள்ளியில் 25.02.2023 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக நடைபெறும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. கோ.மலர்விழி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொ) திரு. காமராஜ், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. வீரமணி, திருமதி. தமிழ்ச்செல்வி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்வேறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனிதவள மேம்பாட்டு அலுவலர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மங்கையராய் பிறப்பதற்கே...







சர்வதேச பெண்கள் தினம் ஒவ்வோராண்டும் மார்ச் 8–ம் தேதி உலகம் முழுவதும் உள்ள பெண்களால் கொண்டாடப்படுகிறது. கொண்டாட்டம் என்ற வார்த்தைக்குப் பிறகு நூற்றாண்டுக்கு முந்தைய போராட்டங்கள் நிறைந்த வரலாறு இருக்கிறது.

ஆண்களுக்கு இணையாக பெண்களும் தங்கள் உரிமைகளைக் கேட்டு போராடியதை குறிப்பிடத்தான் சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8ம் தேதி கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த தினமானது இனம், மொழி, கலாசாரம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பல்வேறு வேறுபாடுகளை மறந்து பெண்கள் தினமாக அனைத்து பெண்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினத்தை பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்காமல் சாதனைகளை கொண்டாடும் வகையிலும் கடைபிடிக்க வேண்டும். இக்கொண்டாட்டங்களில் குறிப்பாக உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆக்கப்பூர்வமான பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்கள் தனியாகவும், குழுக்களாகவும் அமைப்புக்கள் சார்ந்தும், ஆக்கபூர்வமான செயல்வாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சீனா, ரஷ்யா, பல்கேரியா, வியட்நாம் உற்பட பல நாடுகள் மார்ச் 8 ஆம் நாளினை விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளன.

மகளிர் தினத்தின் சுருக்க வரலாற்றினைப் பின்வருமாறு இனங்காட்டலாம். வரலாற்றுக் காலம் முதல் பெண்கள் போகப்பண்டங்களாகவும், அடிமைகளாகவும், உரிமையற்றவர்களாகவும் காணப்பட்ட

**இத்தினத்தை பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்காமல் சாதனைகளை கொண்டாடும் வகையிலும் கடைபிடிக்க வேண்டும்.**



நிலையிலிருந்து படிப்படியாக மீண்ட நிலை இந்நிகழ்வின் பின்னணிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. 1789ம் ஆண்டு ஜுன் 14ம் தேதி சுதந்திரத்துவம், சமத்துவம், அரசனின் ஆலோசனைக் குழுக்களில் பிரதிநிதித்துவம் என்று கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின்போது பாரீஸில் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர்!.

ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் வேண்டும் என்றும் வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணி நேர வேலை, வாக்குரிமை, அடிமைகளாக











**1977ல் ஐக்கிய நாடு பொதுச் சபையில் சர்வதேச பெண்கள் தினத்தை ஐக்கிய நாடு பெண்கள் தினமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது.**

நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்றும் பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களைச் சமாதானம் செய்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக மன்னர் வாக்களித்தார். ஆனால், அது இயலாமற்போகவே மன்னர் லூயிஸ் முடிதுறந்தார். இதனால் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பெண்களும் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

இக்கட்டத்தில் இத்தாலியிலும் பெண்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முயன்று தங்களுக்கு வாக்குரிமை கேட்டுப் போராட ஆரம்பித்தனர். கிரீஸ் நாட்டில் 'விஸிஸ்ட்ரடா' என்பவரின் தலைமையில், ஆஸ்த்ரியா, டென்மார்க், ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகளும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டபோது, ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது.

பிரான்ஸ் நாட்டில் புருஸ்லியனில் 2வது குடியரசை நிறுவிய லூயிஸ் ப்ளாங்க், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கவும், அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடமளிக்கவும் ஒப்புதல் அளித்தார். அந்த நாள் மார்ச் 8, 1848 ஆகும். உலகப் பெண்களின் போராட்டங்களுக்கு வெற்றி கிடைத்த அந்த நாளே, 'மகளிர் தின'மாக அமைய அடிப்படை வித்தாக அமைந்தது!.

1857ல் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி, போராட்டங்கள் ஆரம்பமாகியிருந்தன. இப்போராட்டங்களால் ஆட்சியாளர்கள் நிலைகுலைந்தார். உலக நாடுகள் அனைத்திலும் பரவிய இப்போராட்டங்களின் விளைவாக, 1910ல் பணிக்குச் செல்லும் பெண்களுக்கான சர்வதேச மாநாடு கோபன்ஹேகனில் நடைபெற்றது. இம்மநாட்டில் ஜெர்மனியின் சோசலிச ஜனநாயக கட்சியின் மகளிர் அணித்தலைவியான க்ளாரா ஜெட்கின் (CLARA ZETKIN) சர்வதேச மகளிர் தினம் கொண்டாடும் ஒரு யோசனையை முன்வைத்தார்.

பெண்கள் தங்கள் உரிமைகளைக் கோர சர்வதேசம் முழுதும் ஒரு தினத்தை மகளிர் தினமாகக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். 17 நாடுகளிலிருந்து அந்த மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் அந்தத் திட்டத்தை ஏகமனதாக வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து க்ளாரா ஜெட்கினால் 1911ஆம் ஆண்டு மார்ச் 19ல் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஜெர்மனில் The Vote for Women மற்றும் ஆஸ்திரேலியாவில் Women"s Day என்ற பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு பெண்கள் உரிமைகள், பாராளுமன்றத்தில் பெண்கள் என்ற தலைப்புகளில் பல கட்டுரைகளை வெளியிட்டன. எல்லாப் பத்திரிகைகளுமே பெண்களுக்கு பாராளுமன்றத்தில் தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தின. 1911ல் சர்வதேச மகளிர் தினத்திற்கு கிடைத்த வெற்றி எட்டுத் திக்கிலும் பரவியது. அந்த வெற்றியைத் தொடர்ந்து 1848ல் பிரான்ஸ் மன்னர் ப்ளாங்க், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புக்கொண்ட நாளான மார்ச் 8யை, நினைவுகூரும் வகையில், 1913 முதல் மகளிர் தினத்தை மார்ச் 8க்கு மாற்றியமைத்தது. ஆனாலும் அது உத்தியோக பூர்வமானதாக இருக்கவில்லை.



இது குறித்து 1917 மார்ச் 8ம் தேதி ரஷ்யாவில் உள்ள சென்பீட்டர்ஸ் நகரில் ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. இப் போராட்டத்தில் அலெக்ஸ்சாண்ட்ரா கொலன்றா என்ற ரஷ்யப் பெண்ணியவாதியும் கலந்து கொண்டார். இப்போராட்டத்தையடுத்து 1921ம் ஆண்டு மார்ச் 8ம் தேதியே சர்வதேச பெண்கள் தினமாக உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மார்ச் 8ம் தேதி சர்வதேசப் பெண்கள் தினமாக கடைபிடிக்கப்பட்டு சம உரிமைகளுக்கான பெண்களது போராட்டம் தொடர்கிறது.

ஐ.நாவும் பெண்கள் முன்னேற்றத்துக்காவும் அவர்கள் சமத்துவ கோரிக்கைகளுக்காவும் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. 1945ல் சான்பிரான்ஸ்கோவில் நடந்த உடன்பாட்டின்படி பெண்களுக்கு சம உரிமை என்பது அடிப்படை உரிமையாக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சர்வதேச கொள்கைகள், வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் திட்டங்கள், இலட்சியங்கள் உள்ளிட்டவற்றை மேம்படுத்த ஐக்கிய நாடு உழைத்துள்ளது. 1975ம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐக்கிய நாடு அறிவித்தது. 1977ல் ஐக்கிய நாடு பொதுச் சபையில் சர்வதேச பெண்கள் தினத்தை ஐக்கிய நாடு பெண்கள் தினமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அதே ஆண்டு பெண்கள் மாநாட்டுக்கும் ஐக்கிய நாடு ஏற்பாடு செய்தது.

சர்வதேச அளவில் பெண்கள் தினம் கடை பிடிக்கப்பட்டதை அடுத்து பெண்கள் நலன் குறித்து சர்வதேச மாநாடுகளுக்கு அது ஊக்குவித்தது. இச்சந்தர்ப்பத்தில் பெண்ணியம், பெண் விடுதலை, பெண்ணுரிமை போன்ற கருத்துக்கள் குறித்துச் சற்றுச் சிந்தித்தல் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

சர்வதேசப் பெண்கள் தினம் சாதாரண பெண்ணிற்கு தைரியம் அளித்து சாதனை படைக்கும் பெண்ணாக வரலாற்றில் உரிமை கோரும் பெண்ணாக உயர்த்தியது என்பது ஓரவுக்கு ஏற்றுக் கொள்ள முடிந்த போதிலும் கூட பெண்ணை இறுகப் பற்றியிருக்கும் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் பெண்ணின் உயிரையும் உள்ளத்தையும் வதைக்கின்ற அத்தனை விலங்குகளும் உடைத்தெறியப்பட வேண்டும்.

தாயாய், மனைவியாய், மகளாய், சகோதரியாய், சினேகிதியாய், சேவகியாய், மேலாளராய், இயக்குநராய், மென்பொருள் வித்தகராய், விமான ஓட்டியாய், விவாத பேச்சாளராய்.. எத்தனை எத்தனை பரிமாணங்கள், அத்தனையிலும் அசத்தும் பெண்குலம்!! இன்றும் தனது குடும்பத்துக்காக சமுதாய மாற்றத்துக்காக உழைக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் பெண்கள் தின வாழ்த்துக்களை சொல்வதில் பெருமை கொள்கிறது சுய உதவிக் குழு மகளிரின் தோழியான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்.




# பெரு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு சான்று வழங்கும் நிகழ்ச்சி

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கும் பெருநிறுவனங்களுடன் இணைந்து தொழிற்திறன் மற்றும் வாழ்வாதாரப் பயிற்சிகள் துவக்குதல் மற்றும் பெருநிறுவனங்களுடன் புரிந்துணர்வு சான்று வழங்கும் நிகழ்ச்சி சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 09.02.2023 அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், சாலை போக்குவரத்து நிறுவனம், அடையாறு ஆனந்தபவன், நேச்சுரல்ஸ், கேர் எர்த் டிரஸ்ட், இயற்கை டெக் லேப், அப்பல்லோ மெடி ஸ்கில்ஸ், இன்னோமைன்ட்ஸ் ஸ்கில், ஸ்கை ரைடர் ஏரோ சொலுசன்ஸ் மற்றும் ஐசிடி அகாடமி போன்ற பெரு நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு சான்றிதழ்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இதைத் தொடர்ந்து அன்றைய தினமே பயிற்சிகளும் துவக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. வி.பிச்சை, சென்னை மாவட்ட ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீனிவாசன், மாநில திட்ட வல்லுநர்கள் திரு. மூர்த்தி, திரு. நித்தியானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வாழ்வாதார மேம்பாட்டு மற்றும் தொழில் வளர்ச்சிப் பயிற்சி

இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் திருச்சிராப்பள்ளியில் 13.02.2023ஆம் தேதி முதல் 15.02.2023ஆம் தேதி வரை நடைபெற்ற தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்களுக்கான வாழ்வாதார மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.



இப்பயிற்சியில், நகர்ப்புரத்தில் உள்ள வாழ்வாதார வாய்ப்புகள், நிதி மேலாண்மை, சந்தைப்படுத்துதல், சரக்கு மேலாண்மை, ஒருங்கிணைந்த தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் மற்றும் யுக்திகள் போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மாநில இயக்க மேலாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், இளம் தொழில் வல்லுநர் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு, சிறப்பாக பயிற்சி பெற்றனர்.




# பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்துடன் இணைந்து ஆங்கில திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் கீழ், திட்ட செயலாக்க முகமையைச் சார்ந்த ஆங்கில பயிற்றுநர்கள் மற்றும் உதவி திட்ட மேலாளர்களுக்கான "ஆங்கில பேச்சுத் திறன் மற்றும் மென் திறன் மேம்பாட்டு பயிற்சி" சென்னையில் 2023 பிப்ரவரி 1 முதல் 3 வரை 3 நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சியில், மாநிலத்தின் அனைத்து பகுதிகளைச் சார்ந்த DDU-GKY திட்ட செயலாக்க முகமை நிறுவனங்களைச் சார்ந்த ஆங்கில பயிற்சியாளர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் சுமார் 80 பேர் பங்கேற்றனர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் DDU-GKY திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு பயிற்சியின்போது கூடுதலாக எங்ஙனம் ஆங்கில அறிவு, மென் திறன் அறிவு கற்பிக்கலாம் என்பது குறித்து பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தினரால் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது .

மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்ப பயிற்றுவிக்கும் முறை, எளிதில் புரியும் வண்ணம் பாடம் நடத்துதல், மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை தூண்டுதல், மாணவர்களின் ஆளுமை திறனை வளர்த்தல் மற்றும் குழுவாக இணைந்து செயல்படுதல் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி. பயல்தாஸ் குப்தா, திருமதி. புஷ்பா கோபாலன் மற்றும் பயிற்றுனர்கள் இப்பயிற்சியை அளித்தனர்.

பயிற்சியின் மூன்றாவது நாள் நடைபெற்ற சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.

பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தின் தென்னிந்திய பிரிவின் இயக்குனர் திருமதி. ஜனகா புஷ்பநாதன் பயிற்சியின் சிறப்பம்சங்கள் குறித்து விளக்கிப் பேசினார். DDU-GKY திட்ட முதன்மை இயக்கு அலுவலர் திரு. சு. சங்கர், மாநில திட்ட மேலாளர் திரு.ஜி. குமரன், உதவித் திட்ட அலுவலர் திரு. சி பழனி ஆகியோர் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.









# வட்டார அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் திருப்பரங்குன்றம், அலங்காநல்லூர் மற்றும் வாடிப்பட்டி வட்டாரங்களில் வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம் 24.02.2023 மற்றும் 25.02.2023 ஆகிய நாட்களில் நடைபெற்றன.

மதுரை மாவட்டத்தில் உள்ள முன்னணியில் உள்ள தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்ட இம்முகாம்களில் தனியார் நிறுவனங்களில் பணி வேண்டி ஏராளமான இளைஞர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். அவ்வாறு கலந்து கொண்டவர்களில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.எம்.காளிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ரூட்செட் இயக்குநர், வட்டார இயக்க மேலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு



திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. க. முத்துமீனாள் அவர்கள் 06.01.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி ஒன்றியம், சொரகயல்நத்தம் ஊராட்சியில் நடைபெற்ற இந்த ஆய்வின்போது, திருப்பத்தூர் மாவட்டத்தில் இலக்கு மக்கள் பட்டியல், நிர்வாகிகளின் செயல்பாடுகள் மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு ஆகியவற்றை ஆய்வு செய்த கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில், சர்வதேச பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை எதிர்ப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, திருப்பத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**


| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**


**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.





# உளுந்து சாதம்

**கறுப்பு உளுந்து சாதம் பெண் குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. கறுப்பு உளுந்தை வைத்து உளுந்து சாதம் எப்படி செய்வதென்று பார்ப்போம்.**

**தேவையான பொருட்கள் :**

அரிசி – 1 கப், தோல் உளுந்து – 1/2 கப் , உப்பு – தேவையான அளவு

அரைக்க தேவையான பொருட்கள் :

தேங்காய் துருவல் – 4 மேஜைக்கரண்டி, பூண்டு பற்கள் – 4, சீரகம் – 1 தேக்கரண்டி

**செய்முறை :**

அடுப்பில் கடாயை வைத்து சூடானதும் அரிசி, தோல் உளுந்து இரண்டையும் போட்டு லேசாக வறுத்துக் கொள்ளவும். தேங்காய் துருவல், பூண்டு பற்கள், சீரகம் மூன்றையும் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். குக்கரில் அரிசி, தோல் உளுந்து, உப்பு, அரைத்த தேங்காய் கலவை, எல்லாவற்றையும் போட்டு அதோடு 3 கப் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து மூடி போட்டு மூடவும். நீராவி வந்ததும் வெயிட் போட்டு 4 விசில் வரும் வரை வைத்திருந்து அடுப்பை அணைக்கவும். நீராவி அடங்கியதும் மூடியை திறந்து நன்றாக கிளறி விடவும். சுவையான உளுந்து சாதம் ரெடி. உளுந்து சாதத்துடன் அவியல், தக்காளி பச்சடி, எள்ளுத் துவையல் சேர்த்து சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.

**சமையலில் செய்யக் கூடாதவை!**

- ★ ரசம் அதிகமாக கொதிக்ககூடாது.
- ★ காபிக்கு பால் நன்றாக காயக்கூடாது.
- ★ மோர்க்குழம்பு ஆறும் வரை மூடக்கூடாது.
- ★ கீரைகளை மூடிப்போட்டு சமைக்கக்கூடாது.
- ★ காய்கறிகளை ரொம்பவும் பொடியாக நறுக்கக்கூடாது.
- ★ சூடாக இருக்கும் போது, எலுமிச்சம்பழம் பிழியக்கூடாது.
- ★ தக்காளியையும், வெங்காயத்தையும் ஒன்றாக வதக்கக்கூடாது.
- ★ பிரிட்ஜில் வாழைப்பழமும், உருளைக்கிழங்கும் வைக்கக் கூடாது
- ★ பெருங்காயம் தாளிக்கும் போது, எண்ணெய் நன்றாக காயக்கூடாது.
- ★ தேங்காய்ப்பால் சேர்த்தவுடன், குழம்பு அதிகமாக கொதிக்கக்கூடாது.
- ★ குழம்போ, பொரியலோ, அடுப்பில் இருக்கும் போது கொத்தமல்லி இலையை போடக்கூடாது.





**இளநரையை போக்க உதவும் வெந்தயம்..!**

நம்மில் பெரும்பாலானோருக்கு இருக்கும் பிரச்சனை இளமையிலேயே நரைமுடி தோன்றுவதுதான். அதற்கு வெந்தயம் மிகச்சிறந்த மருந்து. வெந்தயத்தில் நன்றாக நீரில் ஊறவைத்து அரைத்து முகத்தில் தடவினால் முகம் பொலிவு பெறும் பாலுடன் சேர்த்து அரைத்து முகத்தில் பூசலாம். இரவு முழுவதும் வெந்தயத்தை நீரில் ஊற வைத்து அந்த நீரைக் கொண்டு முகத்தினை கழுவினால் தோலில் ஈரப்பதம் அதிகமாகும். வெந்தயத்தை இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து மறுநாள் காலையில் அதை அரைத்து தலையில் தேய்த்து ஊற வைத்து குளித்தால் முடி உதிர்வு மற்றும் இளநரையை போக்கும், வெந்தயத்தை தேங்காய் எண்ணையுடன் சேர்த்து தலைக்கு தேய்த்தாலும் தலை முடி உதிர்வை தடுக்கும். ஊற வைத்த வெந்தயம் மற்றும் கருவேப்பிலை ஆகியவை சேர்த்து தலையில் அரைத்து பூசி குளித்தால் இளநரையை கட்டுப்படுத்தும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

# வெற்றிக் கதைகள்



வெற்றி



## தேன் கூட்டம் மற்றும் ரோஜாக் கூட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிகரமான செயல்பாடுகள்

நீலகிரி மாவட்டம், உல்லத்தி ஊராட்சிக்குட்பட்ட முத்தநாடு மந்து கிராமத்தில் வசிக்கும் தோடர் பழங்குடி இனங்களை சேர்ந்த பெண்கள் இணைந்து தேன் கூட்டம், ரோஜா கூட்டம் என இரண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்துள்ளனர். குழுவின் மூலமாக நபார்டு லோன் வாங்கி, அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, தோடர் இன ஷால், துப்பட்டா, மப்லர், பர்சு, செல்கவர், சுருக்கு பை, ரன்னர், கோட், ஹேண்ட்பேக் மற்றும் முகக் கவசம் போன்றவற்றைத் தயாரித்து, சுற்றுலா பயணிகள் வரும் இடத்தில் மதி மற்றும் மநிதி என்ற பிராண்ட் பெயரில் விற்பனை செய்து வருகின்றனர். இப்பொருட்களை உள்ளூர் மக்கள் மட்டும் இல்லாமல் சுற்றுலா பயணிகளும் அதை விரும்பி வாங்குகிறார்கள்.

இக்குழுவினர் தலைகுந்தா, சேவந்துமயில், மதி அங்காடிகளிலும் மகளிர் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் மாவட்ட மற்றும் மாநில கண்காட்சிகளில் பங்கேற்றும் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு மாதத்திற்கு ரூ.8000/- வரை லாபம் கிடைக்கிறது. மேலும் வெளிநாடுகளுக்கும் இந்தப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் மைசூர், சென்னை, பெங்களூர், கோவை போன்ற இடங்களிலம் தங்களின் தயாரிப்பு பொருட்களை தேன் கூட்டம் மற்றும் ரோஜாக் கூட்டம் மகளிர் சுய உதவிக் குழுவினர் விற்பனை செய்து வருகின்றனர். இப்பொழுது HADP மூலமாக ரூ.2,00,000/- பெற்று Toda Hut என்னும் ஒரு வீடு கட்ட ஆரம்பித்துள்ளார். இதில் இரு குழுவினரும் இணைந்து தைலம், தேன், டீதூள் போன்றவை தயாரிக்க முடிவு செய்துள்ளனர்.

உல்லத்தி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் தேன் கூட்டம் மற்றும் ரோஜாக் கூட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இணைந்துள்ளன. கூட்டமைப்பின் மூலம் கடன் உதவி பெற்று மேற்கண்ட குழுக்களின் உறுப்பினர்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

தங்களது குழுக்கள் சிறப்பாக செயல்படுவதற்கு உறுதுணையாக இருந்து, தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தேன் கூட்டம் மற்றும் ரோஜாக் கூட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# நரிக்குறவர் சுய உதவிக் குழுவின் வெற்றிக்கதை






வணக்கம். என்னுடைய பெயர் ஸ்னேகா. நான் நரிக்குறவர் இனத்தை சேர்ந்தவள். நானும் என்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களும் திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், நெமிலி ஊராட்சி, காரந்தாங்கல் என்ற கிராமத்தில் கடந்த 30 ஆண்டுகளாக வசித்து வருகிறோம். இப்பகுதியில் மொத்தம் 44 நரிக்குறவர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். நாங்கள் நாடோடிகளாக சுற்றித் திரிந்து பாசிமணியில் செய்யப்படும் மணிமாலைகள், சோப்பு, சீப்பு மற்றும் பலவிதமான பொருட்களையும் திருப்பெரும்புதூர் பேருந்து நிலையத்திலும் மற்றும் அருகாமையில் உள்ள ஊர்களுக்கு சென்று திருவிழா நடைபெறும் இடங்களிலும் விற்பனை செய்து வந்தோம்.

எங்களுக்கு சொந்தமாக எங்கள் பொருட்களை விற்பனை செய்ய ஒரு இடம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த 20 நபர்கள் ஒன்று சேர்ந்து மகளிர்திட்டத்தின்வழிகாட்டுதலின்படி ஒருசுயஉதவிக்குழுவை ஆரம்பித்தோம். அக்குழுவில் உள்ள எங்களுக்கு குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் புதிய ரக ஆபரணங்கள் தயாரிக்க 15 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக மகளிர் திட்டம், நபார்டு வங்கி மற்றும் ரீட்ஸ் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து கழிவு பட்டு நூலினால் ஆன வளையல்கள் மற்றும் ஆபரணங்கள் செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் எங்கள் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய மகளிர் திட்டத்தின் மூலம் திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய பேருந்து நிலையத்திலுள்ள வணிக வளாக கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்திலுள்ள பட்டு சேலை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் நாங்கள் உற்பத்தி செய்யும் ஆபரணங்களை கொள்முதல் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர். மேலும் கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், துணிநூல் (ம) கைத்தறி அலுவலகம் மூலமாகவும் கழிவு பட்டு நூல்களை எங்களுக்கு இலவசமாக வழங்கிட மகளிர் திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வேற்று மாநிலங்கள் மற்றும் வேறு மாவட்டங்களில் நடைபெறும் சாராஸ் கண்காட்சிகளிலும் எங்கள் நரிக்குறவர் இன மக்கள் உற்பத்தி செய்யும் ஆபரணங்கள் விற்பனை செய்யப்பட்டு எங்களின் வாழ்வாதாரம் சிறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எங்களுக்கு திருப்பெரும்புதூர் பேருந்து நிலையத்திலே உள்ள வணிக வளாகத்தில் ஒரு கடையினை திறந்து வைத்து எங்கள் உற்பத்தி பொருட்களை அந்த இடத்தில் விற்பனை செய்ய வழிவகை செய்துள்ளார். இதனால் எங்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகிறது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அய்யா அவர்களுக்கும், எங்களது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டிற்கும் எங்களின் நரிக்குறவர் மகளிர் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

–ஸ்னேகா

## மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் விற்பனை மையம்

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தங்குடி ஊராட்சியில் கலைமகள் உற்பத்தியாளர்கள் குழுவின் 12 உறுப்பினர்கள் மண்புழு உரம் தயாரித்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கண்ணங்குடி பகுதி முழுமையாக விவசாயம் சார்ந்த பகுதி என்பதாலும், அதிகமான கால்நடைகள் வளர்ப்பதாலும் கால்நடைக் கழிவுகளைக் கொண்டு மண்புழு உரம் தயாரிக்கும் தொழிலைத் தேர்வு செய்து வருகின்றனர். உற்பத்தியாளர் குழுக்களுக்கான நிதி ரூ.1.50 இலட்சம் பெற்று தேவையான உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

30 அடி நீளம் மற்றும் 16 அடி அகலம் கொண்ட கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. இதில் மண்புழு உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தயாரிக்கப்பட்ட மண் புழு உரம் கிலோ ரூ.10/- க்கு விற்பனை செய்து வருகின்றனர். இயற்கை விவசாயம் செய்ய விரும்புவோர், வீட்டுத் தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் அமைத்துள்ளோர் மண்புழு தயாரிப்பு மையத்திற்கு வந்து தங்களுக்குத் தேவையான மண்புழு உரத்தினை வாங்கிச் செல்கின்றனர்.




**PRESS & REGISTRATION OF BOOKS ACT**
**Registration of News papers (Control) Rules 1956**
**FORM IV (SEE RULE 8) Statement about ownership Particulars of**
**TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM**

1. Place of Publication : MUTRAM SOCIETY
Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam ,Chennai – 600 034

2. Periodicity of its publication : Monthly

3. Printer's Name : **V. RAMESH**
Nationality : Indian
Full Address : **CHENNAI MICRO PRINT PRIVATE LTD,**
New No. 130, Old No.34, Nelson Manickam Road,
Aminjikarai, Chennai – 600 029.

4. Publisher's Name : **S.CHINNAPPAN.**
Nationality : Indian
Full Address : Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai – 600 034

5. Editor's Name : **S.CHINNAPPAN.**
Nationality : Indian
Full Address : Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai – 600 034

6. Owner's Name : **MUTRAM SOCIETY - S.CHINNAPPAN.**
Representated by its Secretary
S.CHINNAPPAN.

**I, S.CHINNAPPAN,** hereby that the particulars given adove are true to the best of my knowledge.

Chennai: 600 034.
Date: 23–02–2023.

**(S.CHINNAPPAN)**
Signature Publisher


## பொருளாதாரம் உயர உதவிய மகளிர் திட்டம்

என் பெயர் வசந்தி, நான் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், வகுரணி ஊராட்சி, நடுப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எங்கள் பகுதியில் செயல்படும் யுகம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளதால் குழுவின் மூலம் வங்கி கடன் பெற்று சிறு தொழில் செய்து வந்தேன். பின்னர் DTP என்ற படிப்பை படித்து, அதன் அடிப்படையில் ஒரு அச்சகத்தில் பணிக்கு சென்று வந்தேன். பின்னர் சுயமாகத் தொழில் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தில், எங்கள் குழு உறுப்பினராக இணைந்துள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வாயிலாக கடன் வேண்டி விண்ணப்பித்தேன். மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி வங்கி மூலம் ரூ. 80,000/- நேரடிக் கடனும், கூட்டமைப்பின் மூலம் CIF நிதியாக ரூ. 60,000/-மும் பெற்று, அந்தத் தொகையில் Computer, Printer, Camera போன்ற பொருட்களை வாங்கி, ஒரு கடையை வாடகைக்கு எடுத்து தற்போது அச்சகம் சம்பந்தமான தொழில் செய்து வருகிறேன்.

இத்தொழிலில் மாதம் ஒன்றிற்கு ரூ. 12,000/- வரை எனக்கு வருமானம் கிடைக்கிறது. இதன் மூலம் என்னுடைய வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது. எனது வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு அரசு, மகளிர் திட்டம், யுகம் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு எனது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வணிகம் வளர்க...

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## கடலூர் மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| திருமதி. பி. சங்கீதா,<br>ஸ்ரீ மதுரை மீனாட்சியம்மன் மகளிர் குழு,<br>நிறமாணி ஊராட்சி,<br>நல்லூர் வட்டாரம், கடலூர் மாவட்டம்.<br>கைபேசி - 90474 08749 | மர கைவினைப் பொருட்கள் |  |
| திருமதி. எஸ். தேவகி,<br>ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு,<br>புலிவலம் ஊராட்சி,<br>மங்களூர் வட்டாரம், கடலூர் மாவட்டம்.<br>கைபேசி - 88385 24667 | மூலிகை சோப்புகள் மற்றும் சோப் எண்ணை |  |
| திருமதி. ஆர். வாசுகி,<br>சக்தி மகளிர் சுய உதவிக் குழு,<br>உச்சிமேடு ஊராட்சி,<br>கடலூர் வட்டாரம், கடலூர் மாவட்டம்.<br>கைபேசி - 95855 75723 | பேப்பர் பைகள் |  |
| திருமதி. கே. செல்வி,<br>சாமந்தி மகளிர் சுய உதவிக் குழு,<br>உசுப்பூர் ஊராட்சி,<br>குமராட்சி வட்டாரம், கடலூர் மாவட்டம்.<br>கைபேசி - 80989 55057 | வெட்டி வேர் மாலைகள் |  |
| திருமதி. எம். தமிழரசி,<br>அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழு,<br>காரைக்காடு ஊராட்சி,<br>கடலூர் வட்டாரம், கடலூர் மாவட்டம்.<br>கைபேசி - 93859 25879 | அகர் பத்திகள் மற்றும் பித்தளை பாத்திரங்கள் |   |

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

# வெற்றிக் கதைகள்








## சாலையோர வியாபாரிகள் குழு (CIG)



நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர் அரியநாட்டு பட்டினச்சேரி பகுதியில் ஒரே தொழில் செய்யும் 5 நபர்களை ஒருங்கிணைத்து அன்னை தெரசா சாலையோர வியாபாரிகள் குழு (CIG) ஆரம்பித்து, ரூ.10,000/- வீதம் 5 நபர்களுக்கு ரூ.50,000/- கடன் வழங்கப்பட்டது. கடன் பெற்றவர்கள் அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு மீன் வியாபாரம் தொழில் செய்து வந்தனர். இந்த கடன் தொகை முடிந்த பிறகு இரண்டாம் கட்டமாக ஒரு நபருக்கு ரூ.30,000/-வீதம் 5 நபர்களுக்கு ரூ.1,50,000/- கடன் தொகை வழங்கப்பட்டது. இரண்டாம் கட்ட கடன் தொகையும் கட்டி முடிக்கப்பட்டு தற்போது மூன்றாம் கட்டமாக ஒரு நபருக்கு ரூ.50,000/- வீதம் 5 நபர்களுக்கு ரூ.2,50,000/- கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையைப் பெற்றவர்கள் தங்களின் தொழிலை சிறப்பாக செய்து, கடன் திருப்பம் செய்து வருகின்றனர்.

‘இந்தப் பகுதிகளில் மீன் தொழில் செய்யும் மகளிர் அதிக வட்டிக்கு கடன் பெற்று வட்டி கட்ட முடியாமல் மிகவும் சிரமமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தார்கள். அந்த சமயத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்களுக்கு கடன் வழங்கியதால், நாங்கள் நல்ல முறையில் தொழில் செய்து, முறையாகக் கடன் திருப்பம் செய்து வந்தோம். இதனால் எங்களுக்கு தொடர்ந்து கடன் கிடைத்தது. அதன் காரணமாக தொழிலையும் விரிவுபடுத்தி, கணிசமான வருவாயும் பெற்று வருகிறோம். கடன் பெற்றுத் தந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும், சமுதாய அமைப்பாளர்களுக்கும் எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்” என்கின்றனர் அன்னை தெரசா சாலையோர வியாபாரிகள் (CIG) குழுவின் உறுப்பினர்கள்.

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி



என் பெயர் லட்சுமி, நான் செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பம்மலில் 10 வருடங்களாக வசித்து வருகிறேன். என் கணவர் சுமை தூக்கும் வேலை பார்த்து வருகிறார். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் வசிக்கும் பம்மல் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் துவங்கப்பட்ட சிறகுகள் மகளிர் சுய உதவிக் குழுவில் நான் உறுப்பினராக சேர்ந்து செயல்பட்டு வந்தேன். குழுவில் இருந்து உள்கடன் பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு அழகுக் கலை பயிற்சியில் சேர்ந்தேன். பயிற்சிக்குப் பின்னர் கடை ஒன்றினை வாடகைக்கு எடுத்து அதில் அழகு நிலையம் நடத்தி வருகிறேன். இதன் மூலம் எனக்கு கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது. மேலும் குழுவின் மூலம் 2 முறை கடன் பெற்று அந்தத் தொகையைக் கொண்டு எனது கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கி கடையை விரிவுபடுத்தி வருகிறேன்.



எனது வருமானம் வளர்ந்து வருவதால் எனது வறுமையும் குறைந்து வருகிறது. என் வாழ்வாதாரம் மகளிர் சுய உதவிக் குழுவினால் வளமாகி உள்ளது. எனக்கு இந்த வாய்ப்பை தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சமூக அங்கீகாரம் அளித்த இயக்கம்



என் பெயர் நித்யா, திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியமங்கலத்தில் வசித்து வரும் நான் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு வெளி உலகம் பற்றி தெரியாது. கிடைக்கும் வருவாயில் குடும்பத்தை சிரமத்துடன் நடத்தி வந்தேன். அப்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தைச் சேர்ந்த சமுதாய அமைப்பாளர் எங்கள் பகுதிக்கு வந்து மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றி விளக்கிக் கூறினார்கள். அவரின் ஆலோசனையின்படி 2021ம் ஆண்டு எங்கள் பகுதியில் உள்ள 12 மகளிரை ஒன்றிணைத்து NULM அன்னை மகளிர் சுய உதவிக் குழுவை ஆரம்பித்தேன்.



கொரோனா பெரும் தொற்று சிறிது குறைந்த நேரத்தில் கொரோனா கண்டறியும் வேலை எனக்கு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த மக்களை தேடி மருத்துவம் (MTM) திட்டத்தில் எனக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பணி வாய்ப்பு கிடைத்தது. இதன் மூலம் மக்களிடம் பழகும் வாய்ப்பும் அதிகமாக கிடைத்தது. மருத்துவமனையிலும் நல்ல பெயரும் கிடைத்தது. மேலும் வெளி உலகம் தெரியாத எனக்கு இப்போது தனியாக வெளியிடங்கள் செல்லவும், MTM மூலம் மாத சம்பளம் கிடைப்பதால் குடும்பத்தை நல்ல முறையில் வழி நடத்தி செல்லவும் தைரியம் கிடைத்தது. மகளிர் குழுவில் இணைந்த பின்தான் எனக்கு தன்னம்பிக்கை கிடைத்தது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலமாக எனது பொருளாதாரமும் உயர்ந்து உள்ளது. என்னுடைய வளர்ச்சிக்குக் காரணமான தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்கள் மற்றும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நித்யா

## வாழ்வாதாரத்தை மேம்படுத்திய இயக்கம்

என் பெயர் ரம்யா, நான் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சியில் உள்ள பைப் லயன் தெருவில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் வசிக்கும் பத்து பெண்கள் சேர்ந்து முறுக்கு வியாபாரம் செய்து வந்தோம். எங்கள் பகுதியில் உள்ள சமுதாய அமைப்பாளரின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மணீஸ் மகளிர் சுய உதவிக் குழுவினை ஆரம்பித்தோம். எங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், தொழிலை விரிவுபடுத்தவும் சமுதாய அமைப்பாளர் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அறந்தாங்கி கிளையில் எங்கள் குழுவிற்கு வங்கி நேரடிக் கடனாக ரூ.3,00,000/- வாங்கி கொடுத்தார். அதை முறையாக திருப்பி செலுத்தி வந்தோம்.

பின்பு எங்கள் பகுதியில் உள்ள அனைத்து குழுக்களையும் இணைத்து வேங்கை பகுதி அளவிலான கூட்டமைப்பினை உருவாக்கினார்கள். நாங்கள் அந்த கூட்டமைப்பில் எங்கள் குழுவை இணைந்து, கூட்டமைப்பின் வாயிலாக NULM திட்டத்தின் கீழ் PMFME - பதிவு செய்து நபருக்கு ரூ.40,000/- வீதம்; தொழில் கடன் பெற்றோம். இத்தொகையை ஏற்கனவே நாங்கள் செய்து கொண்டிருந்த முறுக்கு வியாபாரத்தினை விரிவுபடுத்த பயன்படுத்திக் கொண்டதன் மூலம் அதிக வருவாய் ஈட்டி, அனைத்து உறுப்பினர்களும் மகிழ்ச்சியாக தொழிலை நடத்தி வருகிறோம்.

தொடர்ந்து எங்களுக்கு கடனுதவி பெற்றுத் தந்து எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது மணீஸ் மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- வி. ரம்யா



## வாழ்வாதாரத்தை வளமுள்ளதாய் மாற்றிய இயக்கம்

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சி, முல்லைவாடி அடைக்கலம் தெருவில் வசித்து வரும் என் பெயர் சந்தோஷம் (க/பெ. கோவிந்தன்). எங்கள் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் ஆதிசக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள நான் கடந்த 15 ஆண்டுகளாக எனது குடும்ப தொழிலான மண்பாண்டங்களைத் தயார் செய்து ஆத்தூர் நகராட்சி சாலையோரம் விற்பனை செய்து வருவதுடன், கெங்கவல்லி, தம்மம்பட்டி, நரசிங்கபுரம் போன்ற ஊர்களுக்கும் சென்று அங்கு நடைபெறும் வாரச்சந்தைகளிலும் விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் எனது குடும்பத்தை நடத்தி வந்தேன்.

இந்நிலையில் கொரோனா காலக்கட்டத்தில் நான் உற்பத்தி செய்த மண்பாண்டங்களை விற்பனை செய்ய முடியாமல் இருந்தேன். இதனால் எனது தொழில் மிகவும் நலிவுற்று வருவாய் இல்லாமல் வறுமையில் வாடினேன். அப்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், பாரத ஸ்டேட் வங்கியில் மாண்புமிகு பாரத பிரதமரின் தெருவோர வியாபாரிகளுக்கான (PM-SVANidhi) கடனுதவி திட்டத்தில் ரூ.10,000/- கடன் பெற்று அத்தொகையை மூலதனமாகக் கொண்டு, மீண்டும் எனது தொழிலைத் துவக்கினேன். தற்போது தினசரி ரூ.300/- முதல் ரூ.400/- வரை வருமானம் கிடைக்கின்றது. இதன் மூலம் எனது வாழ்வாதாரம் வளமுள்ளதாக மாறியுள்ளது. வாங்கிய கடனையும் தவணை தவறாமல் திருப்பி செலுத்தி வருகிறேன்.

எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- சந்தோஷம்



## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# வெற்றி கதைகள்

### தமிழ்நாட்டு ஊரகத் தொழில் நிறுவனங்களுக்கு இணை மானிய நிதியுதவி!

### VKP திட்டத்தின் இணை மானிய நிதிக்கான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது!

வெற்றி



ஊரகப் பகுதிகளில் ஏற்கனவே இயங்கி வரும் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி வழங்க வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பல்வேறு வங்கி நிதி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து வருகிறது. அதன் அடிப்படையில் 09.02.2023 அன்று IDBI வங்கியுடன் MGP நிதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் 6,620 நுண் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களும், 500 EG க்களும், 50 உற்பத்தியாளர் நிறுவனங்களும் பயனடையவுள்ளன.

## மீனவப் பெண்கள் தரமான கருவாடு உற்பத்தியில் வளமுயர்ந்து வருகின்றனர்!





நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடற்கரையோரம் அமைந்துள்ள பாப்பாகோவில் கிராமத்தில் ஆண்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர், மகளிர் மீன்களை சுத்தப்படுத்தி கருவாடு வகைகளாக தரம் உயர்த்தி விற்பனை செய்து வருகின்றனர். மீன் பிடித்து வந்த பிறகானப் பணிகளைப் பெரும்பாலும் மகளிரே செய்து வருகின்றனர். மீன் வளப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட 'மெட்ரோ' உணவுப் பதப்படுத்தும் நிறுவனக் களப் பார்வையின் கீழ் 20 மீனவ மகளிருக்கு 15 நாட்கள் தரமான கருவாடு உற்பத்தித் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 13 மீனவப் பெண்களை ஒருங்கிணைத்து அக்னி சிறகுகள் கருவாடு தொழிற்குழு (EG) உருவாக்கப்பட்டது. இவர்கள் தொடக்க நிதிக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு விண்ணப்பித்து வேண்டிய அனுமதியைப் பெற்றனர்.

மீனவப் பெண்களின் மத்தியில் கூட கருவாடு வெறுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது, இந்த நிலையை மாற்றி கருவாட்டில் தரம் மிகுந்த உற்பத்தியைக் கொண்டு வருவதே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். "தொடக்கத்தில் ரூ. 24,700 முதலீட்டில் மூலப்பொருட்கள் கொள்முதல் செய்து அவற்றை மதிப்புக் கூட்டி விற்பனை செய்து ரூ. 45,600 வருவாய் ஈட்டியுள்ளோம்" என்றார் குழு உறுப்பினர்களில் ஒருவரான கலைச்செல்வி.

இந்த கருவாடு வகைகள் தற்பொழுது சில்லரை விற்பனை நிலையங்களிலும் நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகத்திலும் விற்பனை செய்யப்படுகிறது. இப்போது குறைந்தது 50 பெண்களுக்கு பயனளிக்கும் வகையில் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தவும் வளர்க்கவும் திட்டமிட்டுள்ளனர்.

## சணல் பை வழியாக மதிப்புக் கூட்டி வளத்தை கூட்டி வரும் மகளிர்!

பெயர் : சணல் பை தொழிற்குழு
ஊராட்சி : திருவேங்கடநாதபுரம்
மாவட்டம் : திருநெல்வேலி
உறுப்பினர் எண்ணிக்கை : 30



திருநெல்வேலியைச் சேர்ந்த தொழிற்குழு (EG), சணல் பொருளில் மதிப்புக் கூட்டப்பட்டப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் வழியாக மகளிர் தொழிலாளர்கள் தரம் உயர்ந்த கண்ணியமான வாழ்வாதாரத்தை அடைந்து வருகின்றனர். இக்குழுவினருக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம், 21.12.2021 மற்றும் 22.01.2022 ஆகிய) தேதிகளில் சமுதாயத் திறன் பள்ளி (CSS) வழியாக சணல் பைகள் தைப்பது குறித்த 30 நாட்கள் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த CSS பயிற்சிக்காக VKP திட்டத்தின் மூலம் ரூ.1,00,000 நிதியுதவி வழங்கப்பட்டது. இத்தொழிற் குழுவைப் பற்றி குழுவின் உறுப்பினர் மல்லிகா தெரிவிக்கையில் "நாங்கள் எங்கள் தொழிற்குழுவிற்காக தொடக்க நிதி ரூ.75,000/-பெற்றோம். அதில் எங்கள் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்கினோம். தொழிற்குழுவின் கட்டிடத்தில் தேவையான இடத்தை பெற்று, எங்கள் உற்பத்தியைத் தொடங்கினோம். எங்களுக்கு வந்த பணியாணையைப் பொறுத்து உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களை மதுரையிலிருந்து வாங்கினோம். எங்களுக்கு வரும் பணியாணையின் அடிப்படையில் எங்கள் தொழிற்குழுவில் மாதத்திற்கு ரூ. 20,000/- முதல் ரூ. 1,00,000/- வரை வருவாய் ஈட்டி வருகிறோம்" என்றார்.

இக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் பீடித் தொழில்களிலிருந்தும், கூலித் தொழில்களிலிருந்தும் மீண்டு வந்தவர்கள் ஆவர். இதே கிராமத்தில் தற்பொழுது தொழிற்பயிற்சிப் பெற்று மேம்பட்டுள்ளனர். இக்குழுவினரின் உற்பத்திப் பொருட்களை அரசு அலுவலகங்களுக்கும், பெருநிறுவனங்களுக்கும் வழங்கி வருகின்றனர். எனினும் இக்குழுவினர் சணல்பை உற்பத்தியைப் பகுதி நேரமாக மட்டுமே செய்து வருகின்றனர். எதிர்வரும் காலங்களில் முழுநேரமாக செயல்படுவர்.





## இணை மானிய நிதியில் நிறுவனம் விரிவானது! வணிகம் வளமானது!
### (தனி நபர் தொழில் முனைவோர்)

வெற்றி



| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. சுலோச்சனா |
| ஊராட்சி | : | மேலவாசல் |
| வட்டாரம் | : | மன்னார்குடி |
| மாவட்டம் | : | திருவாரூர் |

மேலவாசல் ஊராட்சி, மன்னார்குடி வட்டாரம், திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் வசித்து வரும் சுலோச்சனா 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளார், இவரது 'கலை சிமெண்ட் ஒர்க்ஸ்' நிறுவனத்தில் சிமெண்ட் சுற்றுச் சுவர்களை தயாரித்து விற்பனை செய்து வந்தார். இவரது ஊரில் சாலையமைக்கும் பணி நடந்தபோது பவர் பிளாக் இயந்திரத்தின் மூலம் சிமெண்ட் பிளாக்குகளை உருவாக்கி சாலையமைக்கப்பட்டது. அதைப் பார்த்து ஆர்வம் கொண்ட சுலோச்சனா தனது நிறுவனத்திற்கு பவர் பிளாக் இயந்திரம் வாங்கிடவும், தொழிலை விரிவாக்கவும் திட்டமிட்டார்.

அதற்காக சுலோச்சனா பல வங்கிகளில் கடனுதவி ரூ. 10 இலட்சம் கேட்டு விண்ணப்பித்திருந்தார். ஆனால், இவரது தொழில் மற்றும் நிறுவனத்தை பற்றிய போதிய தகவல்கள் அறியப்படாததால் எந்த வங்கியிலும் இவருக்கு கடனுதவி கொடுக்கப்படவில்லை. அந்த நேரத்தில் அதே ஊராட்சியில் உள்ள இவரது உறவினர் மூலம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்து தெரிந்து கொண்டார். அந்த தகவலின் அடிப்படையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் நிதியுதவிக்காக விண்ணப்பித்தார். அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டக் குழுவினர் சுலோச்சனாவின் நிறுவனத்தை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து நிறுவன விரிவாக்கத்திற்கு ரூ. 5,00,000/- இணை மானிய நிதிக் கடனை இந்தியன் வங்கி மூலமாகப் பெற்றார்.

அந்த நிதியில் பவர் பிளாக் இயந்திரம், மூலப் பொருட்களான இரும்புச் சட்டங்கள், போல்ட்டு நட்டுகள், இரும்பு ராடுகள், மணல், சிமெண்ட் போன்றவற்றை வாங்கியதுடன் நிறுவன மேம்பாட்டிற்கும் பயன்படுத்திக் கொண்டார். தற்பொழுது இவரது நிறுவனத்திலிருந்து சிமெண்ட் தொட்டிகள், சிமெண்ட் ஸ்லாப்கள் போன்று பல்வேறு வகைப் பொருட்களைத் தயாரித்து தனது ஊரின் சுற்றுப்புறப் பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றார்.

தனது நிறுவனத்தில் 7 பேருக்கு வேலை கொடுக்கும் இவர் உற்பத்தி பொருட்களை ரூ. 1 இலட்சம் வரை விற்பனை செய்கிறார், இதில் எல்லா செலவும் போக ரூ. 50,000/- வரை இவருக்கு லாபம் கிடைக்கிறது. மேலும் நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் சுலோச்சனா, தொடர்ந்து தனது நிறுவனத்தை மேம்படுத்தவும், சுற்றுப்புற மாவட்டங்களான தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கும் வணிகத்தை விரிவாக்கிடவும் திட்டமிட்டுள்ளார்.

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## வருமானம் பெருக்கும் கடன் திட்டத்தின் மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளிகளின் வெற்றிக் கதை



தஞ்சாவூர் மாவட்டத்தில், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்படும் சுந்தரநாயகிபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் வருவாய் ஈட்டும் தொழிற்கடன் மூலம் பயன் பெற்று வாழ்வாதாரம் பெற்ற பயனாளியான வடுவம்மாள் தன் வெற்றிக் கதையை பகிர்ந்து கொண்டார்.

“என் பெயர் வடுவம்மாள் (க/பெ. முத்துகிருஷ்ணன்), நான் எங்கள் பகுதியில் செயல்படும் தாமரை-2 மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எங்கள் பகுதியில் செயல்படும் சுந்தரநாயகிபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் நான் வருமானம் ஈட்டும் தொழிலுக்கான கடனாக ரூ.15,000/- பெற்று, இட்லி மாவு அரைத்து வியாபாரம் செய்து வருகிறேன். தினமும் கிராமத்தில் உள்ளவர்களுக்கு சுமார் 100 பாக்கெட் மாவு அரைத்து கொடுத்து வருமானம் ஈட்டி வருகிறேன். அருகில் உள்ள கடைகளுக்கும் பாக்கெட் போட்டு ஒரு நாளைக்கு ரூ.1,000/-வருவாய் ஈட்டி வருகிறேன். எனக்கு தொழில் தொடங்க கடன் வழங்கிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு என்னுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறேன்” என மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.



தஞ்சாவூர் மாவட்டம், த.வடகாடு கிராமத்தில், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்படும் த.வடகாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் வருவாய் ஈட்டும் தொழிற்கடன் மூலம் பயன் பெற்று வாழ்வாதாரம் பெற்ற பயனாளியான சாந்தியின் வெற்றிக் கதையை தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

“த.வடகாடு கிராமத்தில் வசித்து வரும் என் பெயர் P.சாந்தி (க/பெ. பால்சாமி), நான் இதயம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். நான் த.வடகாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் வருமானம் ஈட்டும் தொழிலுக்கான கடனாக ரூ.10,000/- பெற்று மண்பாண்டம் செய்து வியாபாரம் செய்து வருகிறேன். மண்பாண்டம் மற்றும் களிமண்ணைக் கொண்டு இதர கலைப் பொருட்களை செய்து, எங்கள் கிராமத்தில் உள்ள என் கடையில் வியாபாரம் செய்து ஒரு நாளைக்கு ரூ.1000/- வரை வருவாய் ஈட்டி வருகிறேன். எனக்கு கடன் வழங்கிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்கிறார் சாந்தி.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,20,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.



TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th March 2023 Posted at Patrika Channel, Egmore


# பெண்களிடம் உள்ள திறன் பெருமையுடன் தித்திக்கும் பலன்

VKP திட்டம் வழிகாட்டி வளமாக்குகிறது




**மேம்படுத்தப்பட்ட வழிமுறைகள்**

- **சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)** வழியாக தொழிற் திறன் பயிற்சிகள்
- **சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)** வழியாக பண்ணைப் பயிற்சிகள்
- **மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள் (WLSC)** வழியாக தொழில் திட்ட ஆதரவுகள்
- **இளைஞர் ஆற்றல் மையங்கள் (YDC)** வழியாக தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்கான ஆதரவுகள்
- **இணை மானிய நிதித் திட்டம் (MGP)** வழியாக தொழில் விரிவாக்கத்திற்கான மானிய நிதிக்கடன்கள்



## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org
VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp